செ.வெ.எண்-15 நாள்-09.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் எதிர்வரும் **10.02.2017** தேசிய குடற்புழு நீக்க நாள் (National Deworming Day) அன்று 01 முதல் 19-வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழுநீக்க மருந்து (அல்பெண்டசோல்) அங்கன்வாடி மையங்கள், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

10.02.2016 அன்று தேசிய குடற்புழுநீக்க நாள் அன்று விடுபட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் (Mop-up-day) 15.02.2017 அன்று தவறாமல் வழங்கப்படும்.

அங்கன்வாடி மைங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 1 முதல் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளிச் செல்லாத 1 முதல் 19 வயதுவரை அனைத்து குழந்தைகளுக்கும், பள்ளிக்கு செல்லும் குழந்தைகளுக்கு (1 முதல் 12-ம் வகுப்பு வரை) பள்ளியிலேயே அல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்கப்படவுள்ளது.

இப்பணிகளுக்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையினருடன் பள்ளிக்கல்வித்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் துறை பணியாளர் மற்றும் அலுவலர்கள் இணைந்து பணிப்புரிகின்றனர்.

அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் அல்பெண்டசோல் மருந்து / மாத்திரைகள் 1.75 இலட்சம் குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

குடற்புழு நீக்கத்தினால் குழந்தைகளுக்கு இரத்த சோகையை தடுக்கிறது. நோய் எதிர்புசக்தி அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது. அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.

அனைத்து பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அங்கன்வாடி மையப்பணியாளர்கள் பெற்றோர்களை ஊக்குவித்து, அனைத்து குழந்தைகளையும் குடற்புழு நீக்க நாள் அன்று மாத்திரை உட்கொள்ளுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

பள்ளி நிர்வாக குழுவினருடனும் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக அங்கதத்தினர் குடற்புழு நீக்க மருந்தின் பயன் பற்றியும் கொடுக்கப்படும் நாள் பற்றியும் குழந்தைகளுக்கு பெற்றோர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

## வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்